sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# Superfluous Things

## PAPER

**28 May–14 Aug 2022**
**Tanjong Pagar Distripark**

# *தேவைக்கு அதிகமான பொருள்கள்: காகிதம்*

காகிதம் கலைஞர்களின் எண்ணங்களை ஏந்திச்செல்லும் ஒரு வாகனம். விஷய ஞானத்தைப் பொதிந்து நிற்கிறது. கலைஞர்கள் காகிதத்தின் ஊடாக எப்படிச் சிந்திக்கிறார்கள்? பெருகிவரும் 'டிஜிட்டல்' உலகில் இப்போதும் காகிதம் முக்கியத்துவம் வாய்ந்ததா? காலங்காலமாகச் சேர்ந்துவிட்ட, தேவைக்கேற்ப மாற்றிக் கொள்ளப்பட்ட, தொடர்ந்து செம்மைப்படுத்தப்பட்ட, அறிவுக் களஞ்சியங்களைக் கோடிகாட்டக் கலைஞர்களுக்குக் காகிதம் வாய்ப்பளிக்கிறது. ஒரு சொல், ஒரு கருத்து, ஒரு செயல் என்பதை மேலோட்டமாகக் குறிக்க இங்கு காகிதம் என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. கலைஞர்கள் தங்கள் அனுபவங்களைக் காட்சிப்படுத்த, தங்களைப் பதிவு செய்ய, கடந்த காலம் நிகழ்காலம் இரண்டையும் பொறித்து வைக்க அது ஒரு மேடை. பெருமதிப்புக்குரிய தங்களது தனிப்பட்ட கலாச்சாரத்தின் நினைவுகளை எழுப்பும் கதை சொல்லிகளான சமகாலக் கலைஞர்களது படைப்புக்களை, காகிதத்தைக் கையாளும் நம் நீண்ட மரபின் வழியாக இந்தக் கண்காட்சி சிறப்புறச் சுட்டிக்காட்டுகிறது. துண்டுக் காகிதங்களைக் கண்ணுக்கு விருந்தாகவும், தவிர்க்க இயலாத உணர்வுகளின் அதிர்வாகவும் மாற்றும் இந்தப் படைப்புகள் வியப்பூட்டுகின்றன. இந்தப் பயணம் இங்கு தொடங்கி எஞ்சின் அறை (Engine Room) வரை தொடர்கிறது. காகிதத்தின் உருவத்திற்கு அப்பால் நாம் அறிந்தவற்றுடனும் அறியாதவற்றுடனும் நம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளவும், ஐம்புலன்களையும் கூர்மையாக்கிக் கொள்ளவும் உங்களை அழைக்கிறோம்.

நபிலா சையத்
(பி 1985, சிங்கப்பூர்)
100 அர்த்தமற்ற கூற்றுகள்
2022
காகித்ததின் மேல் மை,
அளவுகள் மாறுபடும்

நம் வாழ்வில் காகிதத்தின் பயன்கள், செயல்பாடுகள், அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள அர்த்தங்கள் ஆகியன குறித்து ஆழ்ந்து சிந்தித்து, ஆராய்ந்து அளிக்கும் சுமார் 100 வாக்கியங்களின் தொகுப்பு *100 அர்த்தமற்ற கூற்றுகள்.* ஒரு பிரதியாக அமைந்து அர்த்தமற்ற பழமொழிகள், தத்துவக் கேள்விகள், வெகுஜன கலாச்சார குறிப்புகள், சமூக உறவுகள் மீதான விமர்சனங்கள், ஆக்கபூர்வமான எதிர்வினைகளுக்கான அறிவுரைகள் என அர்த்தங்களின் முழுவீச்சையும் சிந்தனைத் தூண்டல்களையும் வாசகர்களுக்கு அளிக்கிறது அந்தப் பிரதி. அது காகிதத்தை ஒரு பொருளாக நிலைநிறுத்துகிறது எனினும் அதற்கு ஆளுமையும் குரலும் தந்து ஊக்குவிக்கிறது. மானுட சமூகம் இவற்றை திரும்பிப் பார்க்க அனுமதித்து. அதற்கு செயல்வடிவம் கொடுக்கிறது *100 அர்த்தமற்ற கூற்றுகளில்* காகிதம், உறுதியான, குறிக்கோளற்ற தன்மை, உணர்வுகள், உயிர்ப்பு ஆகியவை நிரம்பிய சுயத்தின் குறியீடாகிறது கற்பனைகளால் மட்டுமே கட்டுப்படுத்தக் கூடிய எதிர்காலத்தில் காகிதம் என்பது என்னவாக இருக்கும் என்பதை நோக்கி நம்மைச் செலுத்துகிறது.

லீ ஹோங்போ
(பி.1974 சீனம்)
*தேவதைக் கதைகளின் பூமி*
2010–2016
காகிதம் பசை மற்றும் கண்ணாடி
அளவுகள் மாறுபடும்

லீ ஹாங்போ சீனாவின் நான்கு பெரும் கண்டுபிடிப்புகளில் ஒன்றான காகிதம் என்னும் ஊடகத்தைக் கட்டுடைத்தல் , மீள்தொகுப்பு ஆகியவற்றின் மூலம் மாற்றியமைக்கிறார். ஒரு கலைஞன் என்ற முறையில் லீ இருண்மையோடு உறவாடுகிறார். ஒரு பொருளில் மறைந்துள்ள அதன் சாரத்தை நோக்கி கவனத்தை ஈர்ப்பதன் மூலம், பார்வையாளன் தான் ஏற்கனவே அறிந்ததைக் குறித்து மறுபரிசீலனையும் மீள்சிந்தனையும் செய்ய அவரது சிற்பங்கள் மேடையமைத்துத் தருகின்றன *தேவதைக் கதைகளின் பூமி* ஒரு கற்பனை வரைபடம். அதில் தேன்கூட்டைப் போன்ற வடிவத்தில், காகித அடுக்குகளை கவனமாக ஒட்டிக், கண்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றையும் தட்டையாகக் கிடத்தலாம், முறுக்கலாம், இழுக்கலாம் அழகான பெரிய அளவில் அமைந்த வண்ணமயமான இழுக்கக் கூடிய இந்தக் கண்டங்கள் எல்லைகள் குறித்த

புவிசார் அரசியலையும். அவை சர்வதேச, உள்நாட்டு அரசியல், சமூக, பொருளாதார, உறவுகளில் இயங்கும்  உயிர்ப்புள்ள விசைகள் என்பதனையும்   நுட்பமாகச் சித்திரிக்கின்றன.

செரில் டியோ
(பி1988, மலேசியா)
*ஒரு நேரத்தில் சற்றே சிறியதாக*
2017–2022
காகிதமும் பசையும்,
ஒவ்வொன்றும் சுமார்  6.5 × 7.5 செ.மீ

*'ஒரே நேரத்தில் சற்றே சிறியதாக'* என்பது ஒவ்வொரு நாளும் தீப்பெட்டி அளவில் காகிதச் சிற்பம் செய்வது என்று செரில் டியோ சுயமாக மேற்கொண்ட திட்டம். சுயமாக விதித்துக் கொண்ட சில விதிகளின் அடிப்படையில் நூறுநாள் திட்டமாக அது 2017ல் தொடங்கியது. இத்தனை சிறிய அளவிலான படைப்புக்களை உருவாக்கும் திட்டத்தில் பணியாற்றியது பொருள்களைப் புதிய பார்வையில் காண உதவியது.  ஒவ்வொரு படைப்பின் மூலமும் காகிதத்தின் இயல்பு நன்கு புரிந்தது. ஒவ்வொரு நுண்சிற்பமும் செய்து முடிக்க ஐந்து ஆறு மணி பிடித்தது. அது, சிக்கலான செய்முறைகளையும், சிதிதரிப்புக்களையும் பரிசோதித்துப் பார்க்கும், உன்னதத்தை நாடும் இடைவிடாத பயணத்தில், அவரது கைவினைக் கலையின் விளிம்புகளை நகர்த்துவதாக அமைந்தது. இந்தப் பயணம் டியோவின் காகிதச் சிற்பங்கள் செய்யும் நுட்பங்களை உருவாக்கும் அவரது தனித்திறனைக் கூர்மைப்படுத்திக் கொள்வதோடு அவருக்கே உரித்தான கலைக்குரலைக் கண்டு கொள்ளவும் உதவியது.

ஜுமாதி
(பி 1972, இந்தோனீசியா)
ஜோலி  ஜோலன்
2022
காகிதம் அளவுகள் மாறுபடலாம்

ஜாவனீஸ் மொழிச் சொல்லான இஜோல் இஜோலன் (ijol ijolan) என்பதிலிருந்து உருவாக்கப்பட்ட ஜோலி ஜோலன் என்ற சொற்றொடர் மாற்றிக் கொள்ளல், விற்றல், ஈடுசெய்தல்  என்ற கருத்தைக்  குறிக்கும். இங்கு ஜுமாதி  அவரது பிரம்மாண்டமான அந்தரங்கப் பிரபஞ்சத்தை நமக்குக் கோடிகாட்டுகிறார். முதற் பார்வையில் அது விசித்திரமாகத் தோன்றும் ஆனால் நெருங்கிப் பார்க்கும் போது அது ஒரு மிக வினோதமான உலகைக் காட்டுகிறது அன்னாசிப்பழத்திலிருந்து மனிதப் பாதம் வரை, மலைகள் கட்டிடங்களின் நுண்ணுருவங்களிலிருந்து, துளிர்க்கும் தாவரம் வரை  ஏராளமான வெவ்வேறு பொருள்களை ஓர் உருவம் சுமக்கிறது. எருமை, ஜீவமரம், வேரற்ற மரம், மரமற்ற வேர்கள் என்பன மீண்டும் மீண்டும்

இடம் பெறும் வேறு சில மையக் கலைக் கூறுகள். மரபார்ந்த ஜாவனிய உலகக் கண்ணோட்டம், இமோகிரி (இந்தோனீசியா), சிட்னி  ஆகிய இடங்களில் மேற்கொண்ட பின்நவீனத்துவ நாடோடி வாழ்க்கை, ஆகியவற்றில் கால்பரப்பி நிற்கும் ஜூமாதி,  மனிதர், இயற்கை, விலங்குகள் இணையும் உலகில், மனிதர், இயற்கை ஆகிய கலைக்கூறுகள்  கொண்ட தனிப் படிமங்களை ஊடும் பாவுமாக நெய்கிறார்.

ஃபங்க் மற்றும் கெயீச்சி தனாமி
(நிறு. 1994, சிங்கப்பூர் மற்றும் பி. 1936, ஜப்பான்)
*இயற்கைக்கு மாறுபட்ட நகரம்*
2010/2022
நிறமி கொண்டு அச்சிடப்பட்ட காகிதம்
அளவுகள் மாறுபடும்

தாதேபங்கோ என்ற ஜப்பானியக் காகிதத் தொடர் சித்திரங்கள் கொண்டு உருவாக்கப்பட்ட மிதக்கும் கற்பனை நகரம் *இயற்கைக்கு மாறுபட்ட நகரம்*. எடொ காலம் (1603–1867), மெய்ஜி காலம் (1868–1912)  என்ற கடந்து போன காலங்களில் புகழ்பெற்றுத் திகழ்ந்த இந்த ஜப்பானிய மரபுக் கலையின் பால் ஈர்க்கப்பட்ட கெயீச்சி தனாமி அதைச் சிங்கப்பூர் கலை மற்றும் வடிவமைப்புக் குழுவான ஃபங்க்கிற்கு அறிமுகப்படுத்தியதன் விளைவு இந்தக் கூட்டுமுயற்சி. ஒருபுறம் விழாக் கொண்டாட்ட மனநிலை உடைய கேளிக்கைப் பூங்கா உலகைக் கொண்ட நகரக் காட்சிகளைச் சித்திரிக்கும் ஃபங்க்கின் கருப்பு வெள்ளைச் சித்திரங்களையும் மறுபுறம்  வண்ணங்கள் பளீரிடும் தனாமியின் கனவுலகக் காட்சிகளும் நகரவாழ்வின் துடிப்பான சக்தியைப் பிரதிபலிக்கின்றன. ஃபங்க்கிற்கு கேளிக்கைப் பூங்காக்கள் குழந்தைப் பருவ நினைவுகளின் ஓர் பகுதி.  தனாமியின் முத்திரையான மனப்பிறழ்வுக் காட்சிகளை அவரது வாழ்வின் இரு பருவங்களோடு தொடர்பு படுத்தலாம்: ஒன்று இரண்டாம் உலகப் போரின் போது  டோக்கியோ கண்ட குண்டு மழை. மற்றொன்று 1981ஆம் ஆண்டு  ப்ளூரசி நோயிலிருந்து மீள்வதற்காக நான்கு மாதம் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்ற போது அளிக்கப்பட்ட மருந்துகளால் ஏற்பட்ட மருட்சித்  தோற்றங்கள்.